குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்

STC .No. 1025/2023

**2026 – ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21–ம் தேதி செவ்வாய்கிழமை எ.ம.சா. –2 வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

**எ.ம.சா.** : 2

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** : **ஸ்ரீனிகணேசன்** | | **தொழில்** : | **இந்தியன் வங்கியில் கிளை மேலாளர்** |
| **த/பெ.** : **சுப்பிரமணியன்** | | **வட்டம்** : | அரியலூர் |
| **கிராமம்** : அரியலூர் | | **வயது** : | 39 |

<u>21.04.2026</u>

**மனுதாரர் ஆஜர்.**

**எதிரி ஆஜர் இல்லை எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

<u>முதல் விசாரணை</u>

அரியலூர் இந்தியன் வங்கியில் இவ்வழக்கின் எதிரி குமார் வங்கி கணக்கு வைத்துள்ளார். அவருடைய வங்கி கணக்கு எண்.903008379. அவர் வங்கி கணக்கு வரவு செலவு ஆவணங்களை நான் தற்போது எடுத்து வந்துள்ளேன். 21.07.2022 அன்று ரூ.6000/– பணத்தை குமார் தன்னுடைய வங்கி கணக்கிலிருந்த UPI Reference No.220288511009 அனுப்பியுள்ளார். 12.08.2022 அன்று ரூ. 2000/– UPI மூலமாக அனுப்பியுள்ளார். 12.09.2022 அன்று ரூ. 10,000/– பணத்தை UPI மூலமாக அனுப்பியுள்ளார். 21.09.2022 அன்று ரூ. 2000/– UPI மூலமாக அனுப்பியுள்ளார். 27.09.2022 அன்று ரூ. 2000/– UPI மூலமாக அனுப்பியுள்ளார். 01.10.2022 அன்று ரூ. 6000/– UPI மூலமாக அனுப்பியுள்ளார். 08.10.2022 அன்று ரூ. 2000/– UPI மூலமாக

அனுப்பியுள்ளார். 10.10.2022 அன்று ரூ. 1200/– UPI மூலமாக அனுப்பியுள்ளார். 27.10.2022 அன்று ரூ. 2000/– UPI மூலமாக அனுப்பியுள்ளார். 02.11.2022 அன்று ரூ. 6000/– UPI மூலமாக அனுப்பியுள்ளார். 21.11.2022 அன்று ரூ. 6000/– UPI மூலமாக அனுப்பியுள்ளார். 25.11.2022 அன்று ரூ. 2000/– UPI மூலமாக அனுப்பியுள்ளார். 01.12.2022 அன்று ரூ. 6000/– UPI மூலமாக அனுப்பியுள்ளார். 12.12.2022 அன்று ரூ. 5000/– UPI மூலமாக அனுப்பியுள்ளார். 08.01.2023 அன்று ரூ. 5000/– UPI மூலமாக அனுப்பியுள்ளார். 08.02.2023 அன்று ரூ. 6000/– UPI மூலமாக அனுப்பியுள்ளார். 14.02.2023 அன்று ரூ. 8000/– UPI மூலமாக அனுப்பியுள்ளார். 24.02.2023 அன்று ரூ. 8000/– UPI மூலமாக அனுப்பியுள்ளார். 02.03.2023 அன்று ரூ. 8000/– UPI மூலமாக அனுப்பியுள்ளார். மேற்கண்ட தொகைகள் அனுப்பியதற்கான வங்கி Statement **18 பக்கங்கள் எ.ம.சா.ஆ. 4 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. ( இந்த ஆவணத்தை குறியீடு செய்ய மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இந்த ஆவணம் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாதது என்று எடுத்துரைத்து ஆட்சேபனை செய்தார்).

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் கூறிய UPI மூலமாக அனுப்பப்பட்ட தொகைகள் யார் வங்கி கணக்கிலிருந்து யார் வங்கி கணக்கிற்கு சென்றது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 02.03.2023 தேதிக்கு பிறகு வேறு எந்த பரிவர்த்தனையும் நான் எடுத்து வந்த எ.ம.சா.ஆ.4 ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான்.

**<u>எதிரி தரப்பு மறு விசாரணை</u>**

UPI ID யாருடைய பெயரில் உள்ளது என்பதை வங்கி தலைமை அலுவலகத்தில் கேட்டு பெற்று என்னால் தாக்கல் செய்ய இயலும்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அந்த பண பரிவர்த்தனைகள் எதற்காக நடந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

(ஓம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.